# வெறுப்பு/பாகுபாட்டை புகார்செய்தல்

COVID-19 பெருந்தொற்றுப் பரவலின்போது ஆசிய மற்றும் பசிபிக் தீவுவாசிகளைக் (API) குறிவைத்து வெறுக்கத்தக்கச் சம்பவங்கள் நிகழ்ந்ததை சமூக உறுப்பினர்கள் Washington State Commission on Asian Pasific American Affairs (CAPAA)-க்கு அஞ்சல் அனுப்பியுள்ளனர். கெடுபயனாக, CAPAA வழக்குப் பணிகளையோ அல்லது சட்ட ஆலோசனைகளையோ வழங்குவதில்லை. வெறுக்கத்தக்க செயல்களால் பாதிக்கப்பட்ட அனைவரையும் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க நாங்கள் வலியுறுத்துகிறோம்:

**தேவையெனில் மருத்துவ உதவியைப் பெறுங்கள்.**

**சம்பவத்திற்குப் பிறகு உடனடியாகக் குற்றச்செயலின் அனைத்து விபரங்களையும்  எழுதிக் கொள்ளுங்கள்.** குற்றவாளியின்[களின்] பாலினம், வயது, உயரம், இனம், எடை, உடைகள் மற்றும் பிற வேறுபடுத்தக்கூடிய குணாதிசயங்களைச் சேருங்கள். எந்த அச்சுறுத்தல் அல்லது ஒரு சார்பான கருத்துக்களும் சொல்லப்பட்டிருந்தால் அறிக்கையில் அவற்றையும் சேருங்கள்.

**ஓர் அறிக்கை தயாரியுங்கள்.** சம்பவம் குறித்து உங்கள் உள்ளூர் சட்ட அமலாக்கத்திடம் புகாரளியுங்கள். பாதிக்கப்பட்டவர் காவல்துறையிடம் செல்ல விரும்பவில்லையெனில், ஓர் அறிக்கையை உங்கள் பகுதியிலுள்ள உள்ளூர் சமூக உரிமைகள்/மனித உரிமைகள் பணிக்குழுவிடம் சமர்ப்பியுங்கள். சம்பவமானது வெறுப்பு குற்றச்செயலாக சட்ட விளக்கப்படி ஆகாதெனினும், முறையான அமைப்பிடம் அறிக்கையளிப்பது அவசியம். கீழே பட்டியலிடப்பட்டுள்ள தகவல்களைப் பார்க்கவும்.

மாகாண, மாவட்ட, நகர ஆட்சிகள் மற்றும் பிற அமைப்புகளில் வெறுப்புச் செயல்கள் மற்றும் பாகுபாடு உள்ளிட்ட ஏனையவற்றை புகாரளிப்பதற்கு ஓர் இடம் உண்டு. அத்தகு வள ஆதாரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

- Washington State Human Rights Commission
  சட்டத்தின்கீழ், ஒவ்வொருவருக்கும் பணியில், வீட்டில், பொது விடுதியில் அல்லது கடன் அல்லது காப்பீட்டை நாடும்போது பாகுபாடின்றி இருக்க உரிமையுள்ளது. பாதுகாக்கப்பட்ட சமூக நிலையின் அடிப்படையில் தன்மீது பாகுபாடு காட்டப்பட்டதாக நம்பும் அனைத்துத் தனிநபர்களும் தொழில் உரிமையாளர்கள், வீட்டு வசதி அளிப்பவர்கள் மற்றும் வணிகங்களுக்கு எதிராக பாகுபாடு குற்ற வழக்கு பதியலாம்.

- King County Office of Civil Rights
  இந்த அலுவலகத்திற்கு கிங் மாவட்ட நிர்வாகம் மற்றும் கிங் மாவட்டத்தில் (நகரங்களுக்கு வெளியில்) தொடங்கப்பட்ட கிளைகளின் தொழில் உரிமையாளர்கள், வீட்டு உரிமையாளர்கள், வணிகங்களுக்கான பாகுபாடு சார்ந்த புகார்களைக் கையாளும் அதிகாரமுள்ளது.

- Seattle Office for Civil Rights
  இந்த அலுவலகம் சியாட்டில் நகர எல்லைக்குள் உள்ள வீடு, வேலைவாய்ப்பு அல்லது பொது இடங்கள் ஆகியவற்றில் பாகுபாட்டுத் துன்புறுத்தலுக்கு எதிராக உங்களுக்கு பாதுகாப்பளிக்கும் சட்டங்களை ஆதரிக்கிறது.

- Spokane Police Department: வெறுப்பு மற்றும் ஒரு சார்பு குற்றச் செயல்களை புகார்செய்தல்
  இந்தப் பக்கத்தில் ஒரு வெறுப்பு குற்றச்செயல் என்றால் என்ன, அதை எவ்வாறு புகாரளிப்பது என்ற தகவல்களை உள்ளடக்கியுள்ளது.

- City of Spokane's Human Rights Commission
  நீங்கள் ஸ்போகேன் நகரத்திற்குள் வசிப்பவரெனில் தொடர்புகொள்வதற்கு இது சரியான இடமாகும். இந்தப் பக்கத்தில் வெவ்வேறு வகையான புகார்கள் குறித்த தகவல்கள் அடங்கியுள்ளது.

- Spokane County Human Rights Task Force வெறுப்புச் சம்பவ புகார் படிவம்
  நீங்கள் ஸ்போகேன் மாவட்டத்திற்குள் வேறெங்கு வசிப்பவராக இருந்தாலும் தொடர்புகொள்வதற்கு இது சரியான இடமாகும்.

கொள்கைகளை வடிவமைக்கவும் என்ன நடக்கிறது என்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதில் உதவவும் பின்வரும் அமைப்புகளில் ஒன்றிடம் சம்பவம் குறித்த புகாரைத் தெரிவிக்கலாம். நீங்கள் செல்லவேண்டியது:

- வெறுப்புக்கு எதிராக நில்லுங்கள்
  Asian Americans Advancing Justice ஒருசார்பான சம்பவங்களைக் கண்காணிக்கிறது. நீங்கள் அனுபவித்த அல்லது பார்த்ததை பகிர்ந்து பொதுமக்களுக்கு விழிப்பூட்டவும், மற்றவர்களுக்கு சக்தியளிக்கவும், உதவி தேவைப்படுபவர்களுக்கு சேவையளிப்பவர்களைக் காட்டவும், வெறுப்பு குற்றச்செயல்களுக்கு எதிர்வினையாற்றவும் தடுக்கவும் ஆலோசனை முயற்சிகளை வலுப்படுத்தவும் உங்களால் முடியும். படிவங்கள் ஆங்கிலம், சீன மொழி (மரபானது & எளிமைப்படுத்தப்பட்டது), கொரிய மொழி மற்றும் வியட்நாமிய மொழிகளில் கிடைக்கிறது.

- AAPI வெறுப்புச் சம்பவப் படிவம்
  OCA – Asian Pacific American Advocates என்பது ஆசிய அமெரிக்கர்கள் மற்றும் பசிபிக் தீவுவாசிகளின் (AAPIs) சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்டது. இந்தப் படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படும் வெறுப்புச் சம்பவங்கள் OCA – Asian Pacific American Advocates ஆகிய எங்களுக்கு நாடெங்கிலுமுள்ள AAPI-கள் மீதான வெறுப்பைக் கண்காணிக்க உதவும்.

- AAPI மீதான்வெறுப்பை நிறுத்துங்கள்
  Asian Pacific Policy and Planning Council (A3PCON) மற்றும் Chinese for Affirmative Action (CAA) சமூக உறுப்பினர்கள் தாங்கள் அனுபவித்த வெறுப்புச் சம்பவங்களை புகார் அளிக்க அனுமதிப்பதற்காக இந்த புகார் மையத்தை தோற்றுவித்துள்ளன. தனிப்பட்ட அடையாள விபரங்கள் உள்ளிட்ட தனிப்பட்ட தகவல்கள் இரகசியமாக பராமரிக்கப்படும். அனுமதியோடு மட்டுமே இவை பகிரப்படும். மொத்தமாக இந்தத் தகவல்கள் உதவி, ஆலோசனை மற்றும் கல்விக்காக பயன்படுத்தப்படும். படிவங்கள் ஆங்கிலம், வியட்நாமிய மொழி, சீன மொழி, கொரியமொழி, கிமெர் மொழி, தாய்லாந்து மொழி மற்றும் ஜப்பானிய மொழியில் கிடைக்கின்றன.

இறுதியாக, Human Rights Campaign (HRC) வெறுப்புக் குற்றங்களால் பாதிக்கப்பட்டோருக்கு ஒரு வழிகாட்டியைக் கொண்டுள்ளது: வெறுப்புக் குற்றத்தால் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் என்ன செய்ய வேண்டும்.